Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 30, 2023

வியாழக்கிழமை மார்ச் 30, 2023 | ஒளி: 08 கதிர்: 240 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE



# இந்திய முட்டைகளுக்கு இலங்கையில் அனுமதி

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அது குறித்த அறிக்கை வர்த்தக அமைச்சுக்கு புதன்கிழமை (29) அனுப்பி வைக்கப்படும் என்றும் விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எரிபொருள், ஓட்டோ, பஸ் கட்டணங்கள்

# சட்டென குறைந்தன

## 20க்கும் மேற்பட்ட சிபெட்கோ ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறை

### வளாகத்தில் நுழையவும் தடை

கடமைக்கு சமுகமளிக்காத 20க்கும் மேற்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூட்டுத்தாபன வளாகத்துக்குள் நுழைய அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## விலை திருத்தத் திகதிக்கு முன் குறைப்பு

எரிபொருட்களின் விலைகளை புதன்கிழமை (29) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர, புதன்கிழமை (29) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஓட்டோ கட்டணமும் குறைகிறது

### ஒரு கிலோ மீற்றருக்கு ரூ.20 குறையும்



எரிபொருள் விலை குறைப்பைத் தொடர்ந்து ஓட்டோ கட்டணத்தை நள்ளிரவு முதல் குறைக்க அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஆகக்குறைந்த பஸ் கட்டணம் 30 ரூபாய்

### 12.9 %ஆல் குறையும் என்கிறார் லசந்த



எரிபொருள் விலை குறைப்பை அடுத்து, வியாழக்கிழமை (30) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் ஆகக்குறைந்த பஸ் கட்டணம் 30 ரூபாயாக குறைக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்து உள்ளதாக பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பிரபாகரனின் பிள்ளை படுகொலை:

# இருவருக்கு மரணதண்டனை

■ கனகராசா சரவணன்

ஈழவர் ஜனநாயக முன்னனி கட்சியின் (ஈரோஸ்) செயலாளர்நாயகம் பிரபாகரனிள் 3 வயது பிள்ளை மற்றும் கட்சி உறுப்பினர் ஆகிய இருவரை 1997 ஆம் ஆண்டு கொலை செய்தமை 4 பேரை துப்பாக்கியால் சுட்டும் வெட்டி காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவருக்கும்

தொடர்ச்சி P2




புன்னைக்குடா வீதிக்கு பெயர் மாற்றும்

# கிழக்கு ஆளுநரின் செயல் பதற்றத்தை தூண்டும்


## அலிஸாஹிர் மௌலானா கண்டனம்

■ எம் எஸ் எம் நூர்தீன்

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து, ஏறாவூரில் உள்ள பிரதான வீதியொன்றின் பெயரை மாற்றுவது தேவையற்றமுறையில்

தொடர்ச்சி P2

# ஆதிலிங்கம் மீள பிரதிஷ்டை செய்யப்படும்



எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தான் வவுனியா, வெடுக்குநாறி மலைக்கு செல்லவுள்ளதாகவும், இதன்போது சேதமாக்கப்பட்ட ஆதிலிங்கம் சிலை மீள் பிரதிஷ்டை செய்யப்படும் எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நெடுங்கேணி, வெடுக்குநாறி

# ஆதிசிவன் ஆலயத்தை மீண்டும் அமைக்க முடிவு



துஷ்டர்களால் சின்னா பின்னமாக்கப்பட்ட நெடுங்கேணி ஆதிசிவன் ஆலயத்தை விரைவில் மீண்டும் அமைப்பது தொடர்பாக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டு உள்ளதாகவும், அதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆதரவாக இருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# நாட்டின் கல்வி துறையில் பாரிய மாற்றம் வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



இந்நாட்டில் கல்வித்துறையில் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் சில பாடசாலைகளில் ஒரே மண்டபத்தில் பல வகுப்பறைகள் நடத்தப்படுவதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நமது நாட்டில் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியூடாக நல்ல கல்வி விருத்திக்கு வழிவகுக்கிறதா என்பதை நாம் கண்டறிய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பௌத்த விகாரை, புத்தர் சிலையை எதிர்த்து



# நெடுந்தீவில் கவனயீர்ப்பு

■ எஸ்.நிதர்ஷன்

யாழ்.நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைக் கண்டித்தும், கச்சதீவில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (29) நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2


அரசுக்கு ரூ. 88 கோடி இழப்பு

# வழக்கிலிருந்து சஜின் வாஸ் விடுதலை

மிஹின் லங்கா விமான நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முன்னாள் எம்.பியுமான சஜின் வாஸ் குணவர்தனவை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, புதன்கிழமை (29) உத்தரவிட்டார்.

தரை கையாளும் உபகரணங்களைப் பெறுவதற்காக சிங்கப்பூர் நிறுவனத்துடன் 88.3 கோடி ரூபாய் பெறுமதியான சட்டவிரோத ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியதாக அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரி

# ‘ஹரக் கட்டா’வால் உயர்நீதிமன்றில் மனு

தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடுமாறு கோரி, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ‘ஹரக் கட்டா’ என்றழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன,

தொடர்ச்சி P2




# “பாடுபட்டு உழைத்த உங்கள் பணத்தை பாதுகாருங்கள்”

## ‘கிறிப்டோ’ குறித்து மத்திய வங்கி எச்சரிக்கை

பொதுமக்கள் பாடுபட்டு உழைத்த தமது பணத்தைப் பாதுகாக்குமாறும் இணையத்தளம், ஏனைய ஊடக வழிகள் மற்றும் நேரடியாக எவரேனும் ஆளின்

தொடர்ச்சி P2

மங்கள அறிமுகப்படுத்திய பின்னர்

# மீண்டும் எரிபொருள் விலைச் சூத்திரம்

## ஐஎம்எப், ஜனாதிபதியின் பணிப்புரையில் அறிமுகம்

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமையவும் அமைச்சால் எரிபொருள் விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நெடுந்தீவில் கவனயீர்ப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் நெடுந்தீவு மக்களும் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை ஆக்கிரமித்துள்ள தொல்லியல் திணைக்களம், அதனை பௌத்த விகாரையாக அடையாளப்படுத்தி, அதன் வரலாற்றை திரிபுபடுத்துவதுடன், புதிதாக விகாரையை அங்கு கட்டுவதற்கும் முயன்று வருகின்றது.

இதேபோல் கச்சதீவில் அதன் மத அடையாளத்தை மாற்றும் வகையில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதுடன், ஆங்காங்கே அரச மரங்களும் நாட்டப்பட்டிருக்கின்றது.

இவற்றை கண்டித்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. முன்னதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும், பொதுமக்களும் இணைந்து வெடியரசன் கோட்டையைப் பார்வையிட்டதுடன், அங்கு காலையில் சிறிது நேரம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினையும் நடத்தியிருக்கின்றனர்.

நேற்றைய போராட்டம் காரணமாக யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து மேலதிக பொலிஸார் நெடுந்தீவுக்கு அழைத்துவரப்பட்டு அங்கு பதற்றமான நிலையை பொலிஸார் ஏற்படுத்தியதுடன், புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

## கிழக்கு ஆளுநரின் செயல்...

இனங்களுக்குடையே பதற்றத்தைத் தூண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான அலி ஸாஹீர் மௌலானா தெரிவித்தார்.

காலியைச் சேர்ந்த மறைந்த வர்த்தகர் ஒருவரின் நினைவாக, அஞ்சலி செலுத்தும் போர்வையில் ஏறாவூரில் உள்ள பிரதான வீதியொன்றின் பெயரை இங்குள்ள மக்களுடன் கலந்தாலோசிக்காமல் பெயர் மாற்றம் செய்வது கவலையளிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து புதன்கிழமை (29) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

புன்னைக்குடா வீதியானது ஏறாவூரின் இதயம் போன்று ஊரின் மத்திய பகுதியினூடாக செல்லும் ஒரு பிரதான வீதியாகும், இது ஏ15 நெடுஞ்சாலையை புன்னைக்குடா கடற்கரையுடன் இணைக்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பும் முயற்சியாக, வெளிநாட்டு நேரடி முதலீட்டை உள்வாங்குவதற்காக, முதலீட்டு சபையினது முதலீட்டலுடன் ஏறாவூர் புன்னைக்குடாவில் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டுவரும் புடவை உற்பத்தி வர்த்தக வலயத்துக்கு (பேப்ரிக் பார்க்) சென்றடையக்கூடிய அணுகல் பாதையும் இதுவாகும்.

இங்கு வாழும் மக்களினதும், மற்றும் இந்தப் பிரதேசத்தில் அங்கம் வகிக்கின்ற முக்கிய பங்குதாரர்கள், நிறுவனங்களினதும் கலந்தாலோசனைகளும் இன்றி ஒருதலைப்பட்சமாக இந்த பிரதான வீதியின் பெயரை மாற்றுவது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'வியத்மக' கும்பலில் ஒருவர் என்ற தகுதியால் ஆளுனர் நியமனம் பெற்ற அநுராதா யஹம்பத்தின் அதிகார துஷ்பிரயோகத்தின் ஒரு வெளிப்பாடே தவிர வேறொன்றும் இல்லை.

ஒரு வீதிக்கு பெயரை சூட வேண்டுமானால் - அதைத் தீர்மானிக்க வேண்டிய தகமையை அப்பிரதேச குடியிருப்பாளர்களிடமும், அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகளிடமும் இருக்க வேண்டும். தான்தோன்றித்தனமாக விடுத்துள்ள தவறான உத்தரவை உடனடியாக இரத்து செய்யுமாறு கண்டனத்துடன் கோருகிறோம் என்று உள்ளது.

## வழக்கிலிருந்து சஜின்...

இலஞ்சம், அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கை தொடர முடியாது என்று சஜின் வாஸ் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்ற நீதிபதி குறித்த உத்தரவை பிறப்பித்தார்.

## பாடுபட்டு உழைத்த உங்கள்....

மூலமாக வழங்கப்படும் ஏதேனும் கிறிப்டோ நாணய திட்டத்தில் முதலீடுசெய்யாமல் இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு எச்சரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் புதன்கிழமை (29) வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

'கிறிப்டோ' என்று பொதுவாக குறிப்பிடப்படும் மறைக்குறி நாணயங்களை ஊக்குவித்தல் மற்றும் முதலீட்டினை ஊக்குவிப்பதை வசதிப்படுத்தல் அத்துடன் விற்பனை செய்தல் என்பனவற்றில் ஈடுபடுகின்றவர்களை அத்தகைய நடவடிக்கைகளில் இருந்து தவிர்ந்திருக்குமாறும் மத்திய வங்கி வலியுறுத்துகின்றது.

பொதுமக்கள் விசாரணைகளையும் அவதானிக்கப்படும் அபிவிருத்திக்களையும் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது கிறிப்டோ நாணயங்களைப் பயன்படுத்துவதுடனும் முதலீடு செய்வதுடனும் தொடர்புடைய குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு மீளவும் வலியுறுத்துகின்றது.

கிறிப்டோ நாணயம் என்பது ஒரு நாட்டின் நாணய அதிகாரசபையால் இன்றி தனியார் நிறுவனங்களால் உருவாக்கப்படுகின்ற மெய்நிகர் நாணய வகையொன்றாகும்.

கிறிப்டோ வர்த்தகம், இலாபகரமான முதலீடொன்றாக சில நிறுவனங்களால் பரந்தளவில் ஊக்குவிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனினும், பொதுமக்கள் தாம் மேற்கொண்ட கிறிப்டோ முதலீடுகளின் மூலமாக பாரியளவில் நட்டங்களை சந்தித்துள்ளனர் என்று இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கப்பெறுகின்ற அண்மைய முறைப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கிறிப்டோ நாணயத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு ஏற்படும் குறிப்பிடத்தக்க நிதியியல், தொழிற்பாட்டு, சட்ட மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் அதேபோன்று வாடிக்கையாளர் பாதுகாப்பு கரிசனைகள் பற்றி இலங்கை மத்திய வங்கி 2018, 2021, 2022 ஆம் ஆண்டுகளில் ஊடக வெளியீடுகளினூடாக ஏற்கெனவே எடுத்துக்காட்டி உள்ளது.

மேலும், கிறிப்டோ நாணயங்கள், இலங்கையில் சட்டப்பூர்வமான நாணயமானவையல்ல. கிறிப்டோ நாணயம் முறைசாரா வழிகள் ஊடாக தொழிற்படுவதனால், தேசிய பொருளாதாரத்துக்கு அது பங்களிப்பதில்லை என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

# சிபெட்கோ ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறை

அமைச்சில் புதன்கிழமை (29) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தடையற்ற எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ள அமைச்சர், நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை எனவும் விநியோகம் வழமை போன்று தொடரும் எனவும் தெரிவித்தார்.

செவ்வாய்கிழமை (28) முதல்எரிபொருள் நிரப்புதல் மற்றும் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகளில் இருந்து தங்களை விலக்கிக் கொண்டு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தீர்மானித்தன.

அமைச்சர் காஞ்சன விடுத்த பணிப்புரைக்கு அமைய எரிபொருள் விநியோகத்திற்கு இடையூறு விளைவித்த தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்குவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

கூட்டுத்தாபன வளாகம் மற்றும் சேமிப்பு முனையங்கள் ஆகியவற்றினுள் பிரவேசிப்பதற்கும் குறித்த தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## விலைத் திருத்தத் திகதிக்கு முன் குறைப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனங்களின் எரிபொருள் விலைகள் நள்ளிரவு முதல் குறைக்கப்படவுள்ளன.

அதற்கமைய, 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் 92 ரக பெற்றோலின் விலை 60 ரூபாயால் குறைக்கப்பட்ட 340 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

510 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் 95 ரக பெற்றோலின் விலை 135 ரூபாயால் குறைக்கப்பட்ட 375 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது

ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் விலை 80 ரூபாயால் குறைக்கப்பட்டு 325 ரூபாய் என்ற புதிய விலைக்கும் 510 ரூபாவிலிருந்த ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 45 ரூபாய் குறைக்கப்பட்டு 465 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், 305 ரூபாய்க்கு விற்கப்பட்டும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டு 295 ரூபாய்க்கு விற்கப்படவுள்ளது.

மாதாந்தம் 31ஆம் அல்லது 1ஆம் திகதிகளில் எரிபொருள் விலைகள் திருத்தப்படும் நிலையில் இம்மாதம் 29ஆம் திகதியே விலைத் திருத்தம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டோ கட்டணமும் குறைகிறது

120 ரூபாயாக இருந்த முதல் கிலோ மீற்றருக்கான கட்டணம் 100 ரூபாயாகவும் 100 ரூபாயாக இருந்த 2ஆவது கிலோ மீற்றருக்கான கட்டணம் 80 ரூபாயாகவும் குறைக்கப்படவுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது.

தமது வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை 15 லீற்றர்களாக உயர்த்துவதற்கான கோரிக்கை பல தடவைகள் முன்வைக்கப்பட்ட போதும் அதற்கான பதில் வழங்கப்படாமை குறித்து சங்கம் அதிருப்தி வெளியிட்டது.

மேலும், தங்கள் விருப்பப்படி கட்டணம் வசூலித்து, பயணிகளுக்கு கடும் சிரமத்தை ஏற்படுத்துபவர்கள் குறித்து அரசாங்கம் தலையிட்டு தடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆகக்குறைந்த பஸ்க ட்டணம் 30 ரூபாய்

பஸ் கட்டணம் 12.9 வீதத்தால் குறைக்கப்பட உள்ளதாகவும் வியாழன் (30) நள்ளிரவு முதல் பஸ் கட்டண திருத்தம் அமல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

34 ரூபாயாக இருந்த ஆகக் குறைந்த பஸ் கட்டணத்தையை 30 ரூபாயாக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பஸ் கட்டண திருத்தமானது அனைத்து தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களுக்கும் பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் கல்வித் துறையில் பாரிய மாற்றம் வேண்டும்

ஹம்பந்தோட்டை வீரவில எம். ஆர். தாஸிம் முஸ்லிம் வித்தியாலயத்துக்கு பிரபஞ்சம் திட்டத்தின் 25 ஆவது கட்டத்தின் கீழ் டிஜிடல் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (29) இடம்பெற்ற போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

எமது நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களை வெளிநாட்டு உள்ளூராட்சி மன்றங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு சிஸ்டர் சிட்டி நட்பு எண்ணக்கருவின் ஊடாக அபிவிருத்தி செய்யப்படும் என்று தான் கூறும் போது, இது குறித்த சரியான புரிதல் இல்லாத இந்நாட்டிலுள்ள ஒரு சில அறிவீனர்கள் கேலி செய்வதாக குறிப்பிட்டார்.

எவர் எவ்வாறான கேலி செய்தாலும், இந்நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைக்கப்பட்டு நாட்டிலுள்ள பாடசாலைகள் மற்றும் நகரங்களை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

சுனாமிப் பேரலையால் நம் நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான பாடசாலைகள் அழிவுக்குட்பட்ட போது, வெளிநாடுகளிலுள்ள பாடசாலைகளில் இருந்து பிள்ளைகள் பணம் சேகரித்து நமது நாட்டில் பாடசாலை கட்டமைப்பை மீளக்கட்டியெழுப்ப உதவினார்கள் என்றுதான் அவ்வாறு கேலி செய்பவர்களிடம் கூற வேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

புதிய எண்ணக்கருக்களை, புதிய போக்குகளை, புதிய திட்டங்களை வகுத்து அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இந்தப் பிரபஞ்சம் எண்ணக்கரு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்த எண்ணக்கரு குறித்து யார் எவ்வாறு பேசினாலும் அல்லது கேலி செய்தாலும், இந்த எண்ணக்கரு இப்போது மூச்சு மற்றும் பிரபஞ்சம் திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தி காண்பிக்கப்பட்டுள்ளதாக நினைவூட்டினார்.

நமது நாட்டிலுள்ள சில பாடசாலைகளில் ஓர் ஆங்கில ஆசிரியர் கூட இல்லாத நிலை காணப்படுவதாகவும், இது குறித்து எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பி எப்படியாவது அந்த ஆசிரியர்களை வழங்க ஏற்பாடு செய்வதாகவும் குறிப்பிட்டார்.

எழுத்தறிவில் உயர் மட்டத்தில் இருக்கிறோம் என்று கூறப்பட்டாலும், அந்தக் கணிப்பீட்டை நம்பமுடியாது எனவும் தெரிவித்த அவர், இந்நாட்டில் சம்பிரதாய முறையிலான கல்வி முறைமையில் மாற்றம் வர வேண்டும் எனவும், இதனூடாக உயர் எழுத்தறிவை எட்ட முடியும் எனவும் தெரிவித்தார்.

## ஹரக் கட்டாவினால் உயர்நீதிமன்றில் மனு

தனது சட்டத்தரணிள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் மனுவொன்றை, புதன்கிழமை (29) தாக்கல் செய்தார்.

மடகஸ்காரில் கைதுசெய்யப்பட்ட தான், தற்போது குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டவராகவோ அல்லது சந்தேகநபராகவோ குறிப்பிடப்பட்டுள்ள எந்த வழக்கிலும் தன்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிடுமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

தனது உயிருக்கு பாரிய ஆபத்து இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிடுமாறு மனுவில் கோரியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர், மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் மடகஸ்காரில் கைதுசெய்யப்பட்டு கடந்த 15ஆம் திகதி இலங்கைக்கு அழைத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய முட்டைகளுக்கு இலங்கையில் அனுமதி

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதியும் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, குறித்த முட்டை ஒன்ற 35 ரூபாய் என்ற விலையில் ஹோட்டல் மற்றும் பேக்கரி உரிமையாளர்களுக்கு விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சந்தையில் முட்டையின் விலையை கட்டுப்படுத்தும் வகையிலும், முட்டை தட்டுப்பாட்டுக்கு தீர்வாகவும் இந்தியாவில் இருந்து 20 இலட்சம் முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சு அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 இலட்சம் முட்டைகளும் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த போதும் அனுமதிக்கான மதிப்பீடுகள் செய்யப்படும் வரை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டன.

## ஆதிலிங்கம் மீள்பிரதிஷ்டை செய்யப்படும்

ஆதிலிங்கம் சிலை உடைத்து வீசப்பட்ட அதேபோல விக்கிரகங்களும் மாயமாகியுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

"சம்பவம் தொடர்பில் அறிந்த பின்னர் நானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினோம். உரிய விசாரணைகளை முன்னெடுத்து, சட்டத்தை செயற்படுத்துமாறு ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார். இலங்கை முன்னேறுவதற்கு இன, மத நல்லிணக்கம் என்பது மிக முக்கியம். இந்நிலையில் அதனை சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் சம்பவங்கள் அனுமதிக்க முடியாது. அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார்.

## ஆதிசிவன் ஆலயத்தை...

கிளிநொச்சி நகர பஸ் நிலையத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன - மத ரீதியான வன்முறைகளுக்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்காது என்றார்.

அதேபோன்று, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட தொல்லியல் சின்னம் பற்றிய அறிவிப்பு பலகை தொடர்பாக உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடிய நிலையில், குறித்த அறிவிப்பு பலகை தற்போது நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, கிளிநொச்சி பஸ் மத்திய நிலையம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், "இலங்கை போக்குவரத்து சபையினரும் தனியார் போக்குவரத்து சங்கத்தினரும் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலமே மக்களுக்கு சிறந்த சேவையை பஸ் நிலையத்தினூடாக வழங்கக் கூடியதாக இருக்கும்.

இந்த இரண்டு நிறுவனங்களும் மக்கள் சேவையை மனதில் கொள்ளாமல் இலாபமீட்டும் நோக்கில் செயற்படுவதாலேயே பிரச்சினைகள் எழுகின்றன. இதனால் பேருந்துகளில் பயணிப்போர் மாத்திரமல்ல வீதியில் செல்வோரும் பாதிக்கப்படுகிறார்கள்" என்றார்.

## இருவருக்கு மரணதண்டனை

நேற்று (29) மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என். எம்.எம். அப்துல்லாஹ் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

1997 ம் ஆண்டு, கோவிந்தன் வீதியில் அமைந்திருந்த (ஈரோஸ்) கட்சி காரியாலயத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் கட்சி ஆதரவாளருக்கும் கட்சி செயலாளருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு காரணமாக, 1997-7-17 திகதி பாதுகாப்பு உத்தியோகத்தரும் கட்சி ஆதரவாளரும் இணைந்து காரியாலயத்தில் தங்கியிருந்த கட்சி செயலாளர் மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் குண்டு தாக்குதல் மற்றும் வாளால் வெட்டியும் தாக்குதலை நடத்தினர்.

இதில் கட்சி செயலாளரின் 3 வயது பிள்ளையான கிறேமன் கிஷான், கட்சி உறுப்பினரான சந்திரகுமார் ஆகிய இருவரும் உயிரிழந்ததுடன் பிரபாகரன் அவரது மனைவி மற்றும் கட்சி ஆதரவாளர்கள் இருவர் உட்பட 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் யோகநாதன் ஒரு கையும் புவிராஜசிங்கம் இருகைகளையும் இழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தாக்குதலை மேற்கொண்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் சமீல ரஜீந்தர, கட்சி ஆதரவாளரான விவேகமூர்த்தி ஆகிய இருவரையும் கைது செய்து பின்னர் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள், மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் தொடர்ந்து கடந்த 25 வருடங்களாக இடம்பெற்று வந்தன.

இதனையடுத்து நீதிபதி குறித்த இருவரும் மனித படுகொலை மற்றும் காயத்தை ஏற்படுத்தியமை போன்ற 6 குற்றச்சாட்டுகளில் தலா ஒருவருக்கு 3 இருந்து 5 வரையான குற்றச்சாட்டிற்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும், முதலாவது இரண்டாவது குற்றச்சாட்டுக்களுக்கு மரணதண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

## மீண்டும் எரிபொருள் விலைச் சூத்திரம்

மின்சக்தி அமைச்சில் புதன்கிழமை (29) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், எதிர்காலத்திலும் அமைச்சு இந்தச் சூத்திரத்தை அமல்படுத்தும் என்று தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டத்துடன், எரிபொருளின் மீது விதிக்கப்படும் உண்மையான வரித் தொகை மற்றும் விலையை அதிகரிப்பது அல்லது குறைப்பது ஆகியவற்றைக் கணக்கிடுவதற்கான ஒரு முறையாக புதிய சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் நிதியமைச்சராக இருந்த மங்கள சமரவீரவின் வழிகாட்டுதலின் கீழ் எரிபொருள் விலை சூத்திரம் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், தற்போது மீண்டும் எரிபொருள் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# சமூக சகவாழ்வை சீர்குலைக்கும் முடிவுகளை அமல்படுத்த வேண்டாம்

## கிழக்கு மாகாண ஆளுநரிடம் வேண்டுகோள்

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்

சமூக நல்லுறவு, சகவாழ்வு ஆகியவற்றோடு வாழும் சமூகங்களிடையே சமாதானத்தைச் சீர்குலைக்கும் முடிவுகளை அமல்படுத்த வேண்டாம் என கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்திடம் வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

மாவட்ட சர்வமதப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடல் மட்டக்களப்பு கூட்டுறவு கேட்போர் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற பொழுது, மாவட்டத்தில் இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் அதிகாரபூர்வ விடயங்கள் பற்றிய கரிசனைகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்களும் அதன் சமாதான செயற்பாட்டாளர்களும் கலந்து



கொண்டனர்.

மட்டக்களப்பு மீன் பாடும் தேன் நாடு எனும் பூர்வீகத் தமிழ்ப் பெயரை 'மீனகயா' என்று மாற்றியிருப்பது; அதேபோன்று மட்டக்களப்பு - கொழும்புக்கு இடையிலான 'உதய தேவி' ரயில் சேவைக்கு சிங்களப் பெயரைச் சூட்டியிருப்பது; மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகிலுள்ள பூங்காவிற்கு சிங்களப் பெயரைச் சூட்டியிருப்பது; ஏறாவூர் - புன்னைக்குடா வீதியை 'எல்விஸ் வல்கம வீதி' எனப் பெயர் மாற்ற நடவடிக்கை எடுத்திருப்பது உள்ளிட்ட இன்னும் பல விடயங்களை சமூக நல ஆர்வலர்கள் முன்வைத்தனர்.

இதன்போது, இவ்வாறான பூர்வீகங்களையும் சிறுபான்மை இனங்களின் அடையாளங்களையும் மாற்ற எடுக்கும் அதிகாரபூர்வ நடவடிக்கைகளை, அமல்படுத்த வேண்டாம் என ஆளுநரைக் கோருவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வேண்டுகோள் கடிதம் ஆளுநர், மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் உட்பட சமாதான செயற்பாட்டு அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் இணைப்பாளர் மனோகரன் தெரிவித்தார்.




### விபுலானந்த நாட்டிய நிருத்தியாலய குழு

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 131ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில், நடன நிகழ்ச்சி திங்கட்கிழமை (27) இடம்பெற்றது. அதில் பங்குபற்றிய விபுலானந்த நாட்டிய நிருத்தியாலய நடனக் கலைஞர்களையும் பக்கவாத்திய குழுவினரையும் காணலாம்.

வி. ரி சகாதேவராஜா

## கிழக்கு பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பிரிவு பீடமாக தரமுயர்வு



■ நூருல் ஹுதா உமர்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் தற்போது காணப்படுகின்ற சித்த மருத்துவ பிரிவை, பீடமாக தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2023.03.27ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ. கணகசிங்கம், திருகோணமலை வளாக முதல்வராக பணியாற்றிய காலப்பகுதியில் சித்த மருத்துவ பிரிவை பீடமாக தரமுயர்த்தும் முயற்சிகளை மேற்கொண்டு, வந்த நிலையிலேயே இத்தரமுயர்வுக்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இத்தரமுயர்வு விடயத்தில், திருகோணமலை வளாக தற்போதைய முதல்வர் மற்றும் அதன் ஊழியர்களின் பங்களிப்பும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிற்றுண்டி 40 ரூபாய் சம்மாந்துறையில் தீர்மானம்

■ நூருல் ஹுதா உமர்



சம்மாந்துறையில் புனித நோன்பு காலத்தில், சிற்றூண்டிகளின் விலை மற்றும் உணவுகளின் தரம், பாதுகாப்பு தொடர்பாக தேநீர்சாலை உரிமையாளர்களுடான கலந்துரையாடல், சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே முஹம்மட் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

ரமழான் மாதத்தில், நியாயமான விலையில் சுத்தமாகவும் சுகாதாரமுறையிலும் தயாரித்த உணவுகளை மக்களுக்கு வழங்க உணவகங்கள் முன்வர வேண்டும் என சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே முஹம்மட், தேநீர்சாலை உரிமையாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்போது தேநீர்சாலை உரிமையாளர்களின் கருத்துகள் பெறப்பட்டு, அதன் பின்னர் தரமான உள்ளீடுகளுடன் தயாரிக்கப்படும் சம்ஸா, பெட்டிஸ், றோல்ஸ், கட்லட், ஜம்பர், மரக்கறி றொட்டி ஆகியவற்றின் ஆகக் கூடிய விலை ரூபாய் 40 ஆக விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது, முட்டை உள்ளீடுகளுடன் தயாரிக்கப்படும் சிற்றுண்டிகளுக்கு விலை நிர்ணயிக்கப்படவில்லை என்பதுடன், சிற்றுண்டிச்சாலைகளில் குறித்த உணவுப் பொருட்களின் விலை பட்டியல் காட்சிப்படுத்த வேண்டும் என இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.கபீர், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை தலைவர் கே.எம்.கே றம்சின் காரியப்பர், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரனை அதிகாரி ஏ.ஏ அஹம்மட் சர்பான், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் பீ. வரதராஜன், மாவட்ட மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல். எம் லபீர், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல் றாசீக், சம்மாந்துறை பிரதேச செயலக கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல் தாஸிம், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சம்மாந்துறை வர்த்தக மற்றும் தொழில்கள் சம்மேளனம் தலைவர் ஏ ஹக்கீம், செயலாளர் எம்.எச். எம் ஹாரிஸ், சம்மாந்துறை வர்த்தக சங்கத்தின் செயலாளர் டி.எல் கபீர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சமூக நல்வாழ்வு அமைப்பின் தலைவர் பரமசிங்கம் விபத்தில் பலி

■ வி.ரி சகாதேவராஜா



அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் (சுவாட்) தலைவரும், சமூக செயற்பாட்டாளருமான வடிவேல் பரமசிங்கம் (வயது 46) நேற்று (29) நள்ளிரவு 12. 40 மணியளவில் இடம்பெற்ற கோரவிபத்தில் பலியாகியுள்ளார்.

அக்கரைப்பற்றில் இருந்து கொழும்பு நோக்கி, அலுவலக வானில் சென்றவேளையில், வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செவணப்பிட்டிய பகுதியில், எதிரில் வந்த மரக்கறி லொறியுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. தம்பிலுவிலைப் பிறப்பிடமாகவும் திருக்கோவில் பிரதேச தம்பட்டையை வதிவிடமாகவும் கொண்ட வடிவேல் பரமசிங்கம், ஒரு பிள்ளையின் தந்தையாவார். இவர் ஸ்தலத்தில் உயிரிழந்த அதேவேளையில், சாரதியும் பின் ஆசனத்தில் இருந்த சுவாட் அமைப்பின் தலைமை உத்தியோகத்தர் கே. பிரேமலதன் ஆகியோர் படுகாயங்களுக்கு உள்ளாகி பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பான பிரேரணைகள்:

# பிரச்சினைகளையும் சமூகப் பிளவுகளையும் ஆழமாக உண்டாக்கும்

■ நடராசா கிருஸ்ணகுமார்

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பான பிரேரணைகள், மாவட்ட செயலாளர்கள் தலைமையில் அமைக்கப்படட குழுவொன்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட குழுக்கள் எவற்றிலும் மக்கள் அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பவை உள்வாங்கப்படாமல் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டு, பிரேரணைகள் நுட்பமாக உட்சேர்க்கப்பட்டு இருக்கின்றன. எனவே இது மீள்பரிசீலனை செய்யப்படல் வேண்டும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் நேரடியாக கையளிக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளரின் அலுவலகத்தில், செவ்வாய்க்கிழமை (28) நேரடியாகக் கையளிக்கப்பட்ட குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இந்தப் புதிய எல்லை நிர்ணயத்தின் மூலம், பல வட்டாரங்களில் சமூகப் பிளவுகள் ஏற்படக்கூடிய நிலை சூழலே அதிகமாகக் காணப்படுகிறது.

ஏற்கெனவே இருந்த வட்டார எல்லைகளை விரித்து அகலமாக்கும்போது, குறித்த கிராம நிலையில் அல்லது கிராமசேவகர் நிலையில் உரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடியாத நிலை மக்களுக்கு ஏற்படவுள்ளது. இதனால் அபிவிருத்தி தொடக்கம் மக்கள் பிரதிநிதித்துவம் வரையில் ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும். ஆகவே, இது சமூகப் பிளவுகளை ஆழமாக உண்டாக்கும்.

ஆகவே, இவை போன்ற வரலாற்றுத் தவறுகள் எமது நாட்டில் மேலும் சமூக நெருக்கடியையும் பிரச்சினைகளையும் உருவாக்குமே தவிர, சுமூகமான சூழலை உருவாக்காது. நமது நாடு பிரச்சினைகளிலிருந்து மீள வேண்டியுள்ளது. அதற்கு அதிகாரப் பரவலாக்கம் மிகமிக அவசியமானது. அதைக் குறித்து சிந்திப்பதே மிகத் தேவையானதாகும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





### கிளிநொச்சியில் உலக நீர் தினம்

வடக்கு மற்றும் வடமத்திய மாகாண தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உலக நீர் தினம் – 2023 நிகழ்வுகள், நேற்று (29) கிளிநொச்சியிலுள்ள நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் எந்திரி சுதாகரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் திருலிங்கநாதன், வடக்கு, வடமத்திய மாகாண தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக பொது முகாமையாளர் எந்திரி பாரதிதாசன், வட மாகாண பிரதி பொது முகாமையாளர் எந்திரி பிரதீபன் மற்றும் பிராந்திய முகாமையாளர்கள், பொறியியலாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், வற்றாப்பளை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மு. தமிழ்ச்செல்வன்

## கருவாடு பதனிடுவதற்கான நிதி உதவி



■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மீனவ பெண்கள் குழுக்களுக்கு செவ்வாய்க்கிழமை (28), கருவாடு பதனிடுவதற்காக 50 ஆயிரம் ரூபாய் பணம் மெசிடோ நிறுவனத்தால் வழங்கி வைக்கப்பட்டது. சௌத்பார், ஓலைத்தொடுவாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இரண்டு மீனவ குழுக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருவாடு பதனிடுதல் தொடர்பான திட்டமிடல் கருத்தமர்வு, ஓய்வு பெற்ற மன்னார் மாவட்ட முன்னாள் கடற்றொழில் பணிப்பாளர் மெராண்டாவால் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## தமிழ் மக்களின் பூர்வீக காணி அபகரிப்பு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலாகும்



■ க. அகரன்

தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடுகள், அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலிலே என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அதனோடு இணைந்த பிரதான சூலாயுதம் மற்றும் ஏனைய விக்கிரகங்கள் பிடுங்கி எறியப்பட்ட விடயத்தை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினராகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நீண்ட காலமாக சைவ மக்களால், புனித பிரதேசமாக வழிபடப்பட்டு வந்த மலைப்பகுதியும் ஆலயமும் திட்டமிட்ட வகையிலே அரசாங்கத்தின் முகவர் அமைப்புகளால் இடித்தழிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் முகவர் அமைப்புகளான குறிப்பாக தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வன இலாகா திணைக்களம், மகாவலி எல் வலயம் போன்றவை தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்டு நிலங்களை அபகரிக்கின்றன. குறிப்பாக, தொல்பொருள் திணைக்களம் ஏறக்குறைய 330 பிரதேசங்கள் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரிய இடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும், வடமாகாணத்தில் மட்டும் 167 இடங்கள் பிரகடனப்படுத்தி அபகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாகவே இருக்கின்றது. இதில் அரசாங்கம் சம்மந்தப்படவில்லை என கூற முடியாது. அரசாங்கத்தின் ஆசிர்வாதத்தோடு, அனுசரனையோடு தான் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்தார்.

## "பதவியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக தமிழர் மீதான இனவழிப்புக்கு ஆளுநர் துணை"

■ நிதர்சன் வினோத்

வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா, தனது ஆளுநர் பதவியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக பேரினவாதத்தின் தமிழர் மீதான திட்டமிட்ட இனவழிப்புக்கு துணைபோவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட நாவலர் கலாசார மண்டபம், வடக்கு மாகாண ஆளுநரால் மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டமைக்கு எதிராக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய நாவலர் கலாசார மண்டபம், தமிழர்களுடைய பூர்வீக அடையாளங்களில் ஒன்றாகும். அந்த வரலாற்று அடையாளத்தை புத்தசாசன அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களமொன்றுக்கு வழங்குவதன் மூலமாக, படிப்படியாக சிங்கள பௌத்த ஆதிக்கத்தினுடைய விரிவாக்கத்துக்கு உதவுகின்ற நோக்கத்தோடு வடக்கு ஆளுநர் எதேச்சதிகாரமாக முடிவெடுத்த, நிலைமையிலே கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை கொதித்தெழ வைத்து, மீண்டும் வீதிகளில் இறங்கி போராடுகின்ற நிலைமை தான் யுத்தம் முடிந்து 13 ஆண்டுகளுக்கு பின்னரும் தொடர்கின்றது.

தமிழர்கள் மீது அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்க, ஆளுநர் பேரினவாதத்தை திருப்திப்படுத்துவதற்காக இந்த இனவழிப்பு செயற்பாடுகளுக்கு துணைபோவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழிற்சங்கங்கள் தங்களது சுயநலத்தை கைவிடவேண்டும்



எரிபொருள் விலை குறைப்பானது மக்களுக்கு பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொடுக்கும். இத்தருணத்தில் தொழிற்சங்கங்கள் தங்கள் சுயநலத்தை கைவிட்டுவிட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டுமென ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினருமான எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவருடத்துக்கு முன்னர், எமது நாடு இருந்த நிலைமையை அனைவரும் அறிவார்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசையில் நின்றே பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. எரிபொருளை பெற்றுக்கொள்ள நாள் கணக்கில் மக்கள் வரிசையில் இருந்த யுகத்தை மாற்றி, இன்று எரிபொருள் விலையை குறைத்து, மக்களுக்கு சலுகைகளை வழங்கும் யுகத்துக்குள் நாட்டை ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார்.

எரிபொருள் விலை குறைந்தால் போக்குவரத்து செலவுகள் குறையும். ஆதனால் பொருட்களின் விலைகளும் குறையும். அதேபோன்று சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ள கடன் வசதிகள் ஊடாக, நாடு வழமைக்குத் திரும்பு நிலை உருவாகியுள்ளது. மக்கள் எதிர்கொண்ட பல்வேறு துன்பங்களுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்கும் காலம் மெல்ல மெல்ல உருவாகிவரும் சூழலில் தொழிற்சங்கங்களும் இதற்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்றார்.

எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலில் சிக்கியுள்ள தொழிற்சங்கங்கள் அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்துத் திட்டங்களையும் எதிர்ப்பது சுயநலமானது. மக்களின் வாழ்க்கைச் செலவு குறைய வேண்டுமெனில் தொழிற்சங்கங்களும் தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அதனைவிடுத்து மக்களின் துயரத்தில் அரசியல் செய்ய வேண்டாம். தேவையற்ற போராட்டங்களை செய்து, மீண்டும் நாட்டை பழைய நிலைக்கு கொண்டு செல்ல வேண்டாம் எனவும் எஸ்.ஆனந்தகுமார் கேட்டுக்கொண்டார்.

# பச்சைக் கொழுந்து விலை படுத்தது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

பறிக்கப்படும் ஒரு கிலோ கிராம் பச்சை தேயிலை கொழுந்துக்கான விலை குறைந்துள்ளது என பெருந்தோட்டங்களின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க டொலரின் விலை குறைந்து, இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும் நிலையிலேயே பச்சை தேயிலைக் கொழுந்தின் விலையும் குறைந்துள்ளது.

தற்போது ஒரு கிலோ கிராம் பச்சை தேயிலைக் கொழுந்துக்கு 200 ரூபாய் வழங்கப்படுகின்றது என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக மலைநாட்டு தேயிலைத்தூள் கிலோ கிராம் ஒன்றுக்கு சர்வதேச சந்தையில் 1,250 ரூபாய் விலை கிடைத்தது. எனினும், அந்தத் தொகையானது தற்போது 1,050 ரூபாயாக குறைந்துள்ளது என்றும் தோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க டொலரின் விலை இன்னுமின்னும் குறையுமாயின், தேயிலைத்தூளின் விலையும் குறையும். இது தேயிலை கைத்தொழில் துறையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளமையால், தேயிலைத்தூள் உற்பத்திக்கான செலவும் அதிகரித்துள்ளது. ஆகையால் பச்சைத் தேயிலைக்கான விலை குறையுமாயின் தேயிலைக் கைத்தொழில் பாரிய நெருக்கடிக்குள் சிக்கிவிடும் என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# பூக்கன்றுகள் கண்காட்சி

இரத்தினபுரி வலய பூக்கள் விற்பனை அமைப்பின் மூலம் வருடாந்தம் நடத்தப்படும் பூக்கன்றுகள் விற்பனை கண்காட்சி, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் இரத்தினபுரி புதிய நகரில் நேற்று முன்தினம் (28) திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் தர்சன சமரசேகர, உதவி செயலாளர் எஸ்.பி சமரசிங்க உட்பட மாகாண விவசாயத்துறை அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(சிவாணி ஸ்ரீ)

# நிர்வாகம் உறுதியளித்தது போராட்டமும் முடிந்தது



வட்டவளை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களின் பணி புறக்கணிப்பு போராட்டம், நிர்வாகம் வழங்கிய உறுதிமொழியைடுத்து முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

போனஸ் கொடுப்பனவை வழங்கவேண்டுமென வலியுறுத்தி, வட்டவளை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் கடந்த சில நாள்களாக அறவழி போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு போனஸ் வழங்குவதற்கு நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது. அதற்கெதிராக ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்தனர்.

இந்நிலையில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும், எம்.பியுமான மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோரின் ஆலோசனைக்கமைய இ.தொ.கா பிரதிநிதிகள் வட்டவளை ஆடைத்தொழிற்சாலைக்கு செவ்வாய்க்கிழமை (28) சென்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ், அமைச்சரின் இணைப்பு செயலாளர் அர்ஜூன் ஜெயராஜ், அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ராஜரட்ணம் ஆகியோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.



தொழிலாளர்கள் மற்றும் நிர்வாக தரப்பினருடன் அவர்கள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

இதன்போது சம்பள உயர்வு அவசியம்; போனஸ் வழங்கப்பட வேண்டும்; தற்போது வழங்கப்படும் உணவு மாற்றப்பட வேண்டும்; சில மேற்பார்வையாளர்களின் செயற்பாடுகள் மோசமாக உள்ளன என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்தனர்.

இதற்கு உணவு மாற்றம், மேற்பார்வையாளர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களுக்கு நிர்வாக தரப்பில் சாதக பதில் வழங்கப்பட்டுள்ளது. போனஸ் தொடர்பில் மேலதிடத்தில் கதைத்துவிட்டு அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பணி புறக்கணிப்பு போராட்டம் இடம்பெற்ற 4 நாள்களுக்கும் சம்பளம் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. நிர்வாக தரப்பில் இருந்து கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று (29) முதல் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# சஜித் அணியினர் ஆர்ப்பாட்டம்




■ சுமணசிறி குணத்திலக்க

மின்சாரக் கட்டணத்தை குறை, அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாய் வாழ்வாதார உதவிகளை வழங்கு, வங்கிகளில் அறவிடப்படும் அதிகூடிய வரியை குறை, உழைக்கும் போது அறவிடும் வரியை குறை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து மொனராகலை நகரத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையிலான குழுவினரே இந்த ஆர்ப்பாட்டத்தை செவ்வாய்க்கிழமை (28) முன்னெடுத்தனர்.

# எரிபொருள் வரிசை...

பதுளையில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில், எரிபொருள் வரிசை செவ்வாய்க்கிழமை (28) நீண்டிருந்தது, பெட்ரோல் முறையாக விநியோகிக்கப்பட்டது எனினும், டீசலுக்கு தட்டுப்பாடு நிலவியது என்றும் எரிபொருள் நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(பாலித ஆரியவங்ச)



சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கு

# விசேட பொலிஸ் குழுக்கள் ரோந்து

■ மொஹொமட் ஆஸிக்



கண்டி மாவட்டத்துக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றை அமல்படுத்த கண்டி பொலிஸார் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

விசேட பொலிஸ் குழுக்கள் பல, மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை கண்டி மாநகரம் மற்றும் நகரப்பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுமென மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஹிந்த தஸாநாயக்க தெரிவித்தார.

கண்டி மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக கண்டிக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளுக்கு நேர்ந்த பல்வேறு அசம்பாவிதங்கள் குறித்து அவதானம் செலுத்தி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், அதற்கமைவாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை துன்புறுத்திய குடிபோதையில் இருந்த வழிகாட்டிகள் பலர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியின் பின்னர் பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கண்டி நகருக்கு வருகை தருவதாகவும் அவர்களில் பலர் இரவு நேரங்களிலும் நகரில் சுற்றி திரிவதாகவும் அவர் கூறினார்.

ஓட்டோக்கள், ஹோட்டல்களில் சில சுற்றுலாப் பயணிகள் துன்புறுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். சுற்றுலா வழிகாட்டிகளால் அதிகளவில் துன்புறுத்தல்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளதாகவும், அதனை ஒழுங்குபடுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு மத்திய மாகாண ஆளுநர், வெளிவிவகார அமைச்சு மற்றும் சுற்றுலா அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

எனவே, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக ரோந்துப் பணிகளை மேற்கொள்வது போன்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியுமெனவும், சம்பந்தப்பட்ட வழிகாட்டிகளை ஒன்றிணைந்து இந்த ஒழுங்குமுறைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் எனவும் மஹிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.



# இரத்த பரிசோதனைக்கு ஆகக்கூடுதலான விலை

## பணிப்பாளர் சபைக்கு தண்டம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

இரத்த பரிசோதனைக்காக ஆகக்கூடுதலான கட்டணத்தை அறிவிட்டனர் எனக் குற்றச்சாட்டப்பட்ட தனியார் வைத்தியசாலையில் பணிப்பாளர் சபைக்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா நகரில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றிலேயே இரத்த பரிசோதனைக்காக ஆகக்கூடுதலான கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பிலான வழக்கு, நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (29) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. அதையடுத்தே நுவரெலியா நீதிமன்ற நீதவான் திலின எம். பீரிஸ் 5 இலட்சம் ரூபாயை தண்டமாக விதித்தார்.

நுவரெலியாக நுகர்வோர் அதிகார சபைக்கு நோயாளர்கள் பலர் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய, செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போதே, இரத்த பரிசோதனைக்கு கூடுதலான கட்டணம் அறவிடப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

முழு இரத்தப் பரிசோதனைக்கு நோயாளர் ஒருவரிடம் இருந்து 400 ரூபாய் அறவிடப்படவேண்டும். எனினும், அந்த வைத்தியசாலையில் 550 ரூபாய் அறவிடப்படுகின்றது. அதனையடுத்தே அந்த வைத்தியசாலைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பாராட்டு விழா

■ மெய்யன்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வத்தேகம கல்வி வலய, பன்வில கல்விக் கோட்ட மாவுசா தமிழ் வித்தியாலய மாணவிகள் இருவர் வரலாற்றில் முதல் தடவையாக சித்தி பெற்றுள்ளனர்.

தியாகராஜா சதுர்ஷா 158 புள்ளிகளைப் பெற்றும் காளிதாஸ் கிரியக்சனா 146 புள்ளிகளைப் பெற்றும் பாடசாலையில் வரலாறு படைத்துள்ளனர்.

கஷ்டப் பிரதேச பாடசாலையில் இவ்வாறு சாதனை படைத்த மாணவர்களுக்கான பாராட்டு விழா, பாடசாலை அதிபர் சண்முகம் கிருஷ்ணகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில், வத்தேகம கல்வி வலய கல்வி பணிப்பாளர் திருமதி டபிள்யூ.எம் தரங்கா குணரட்ண பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களை கௌரவித்தார். அதிபருக்கும் வகுப்பாசிரியையான திருமதி பி ஜீவனா உள்ளிட்ட ஆசிரியர்களுக்கும் பெற்றோர்கள் தமது பாராட்டுகளை தெரிவித்தனர்.

# கள்ளு லொறியின் சாரதிக்கு வலை

■ இரா.யோகேசன், ரஞ்சித் ராஜபக்ஷ, டி.சந்ரு



ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை, தியகல பகுதியில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீரபிட்டிய, மொரகஹாபள்ளம பிரதேசத்தைச் சேர்ந்த பிரதிப் குமார அஸ்விஸ் (வயது - 30) என்பவரே உயிரிழந்துள்ளார்.

'கள்' ஏற்றிக்கொண்டு குளியாப்பிட்டியவிலிருந்து ஹட்டன் நோக்கி வந்து கொண்டிருந்த 'கள்' லொறியும், ஹட்டனில் இருந்து கினிகத்தேன நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பலியானார் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து சம்பவித்தபோது வட்டவளை பகுதியில் மழையுடனான வானிலை நிலவியுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்தவர் வழுக்கிச்சென்று, லொறியின் பின்பகுதி சில்லில் சிக்குண்டார் என விசாரணையில் தெரியவந்துள்ளது. எனினும், 'கள்' லொறி அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட்டது. அதன் சாரதியை தேடிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பயங்கரவாத தடைச்சட்டத்துக்கான மாற்றீடு பயங்கரமானது

எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக, நாடளாவிய ரீதியிலுள்ள எரிபொருள் நிரம்பும் நிலையங்களுக்கு முன்பாக செவ்வாய்க்கிழமை இரவுவேளையில் திடீரென முளைத்த வரிசை, ஒருசில மணிநேரத்துக்குள் காணாமற்போய்விட்டது. சிலோன் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதித்தன. அதனையடுத்தே இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தது.

தொழிற்சங்க போராட்டத்தால், கொலன்னாவையில் அமைந்துள்ள சிலோன் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சேமிப்பு முனைத்தில் இருந்து பௌசர்கள் வெளியேறவில்லை. வெற்று பௌசர்களும் உள்நுழைய அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில், நீண்ட விடுமுறை நாள்களில் தாங்கள் சிக்கிக்கொள்வோமென பலரும் சிந்தித்தனர். முன்கூட்டியே எரிபொருயட்களை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிற்கத்தொடங்கிவிட்டனர்.

எனினும், இராணுவத்தை அதிரடியாக களமிறக்கிய அரசாங்கம், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்தது. எரிபொருள்களும் சீராக விநியோகிக்கப்பட்டன.

இந்நிலையில்தான், வீதிக்கு இறங்குவோரை பயங்கரவாதிகளாவும், போராட்டங்களில் ஈடுபடுவோரை அரசாங்கத்துக்கு எதிராக சதிசெய்வோர் என்றும் சித்திரிக்கும் வகையிலான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்பதையே ஐ.நா வலியுறுத்தியிருந்தது, எனினும், அதில் திருத்தங்களை மேற்கொண்டிருக்கும் அரசாங்கம், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது பயங்கரமானதென பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதியில் இறங்குவோரை பயங்கரவாதிகளாக சித்திரிக்கும் வகையில், சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டியுள்ள தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜே.வி.பியின் உறுப்பினருமான விஜித ஹேரத், இந்தச் சட்டத்தை வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாக எச்சரித்துள்ளன.

இந்தச் சட்டம் இன்னும் அமல்படுத்தப்படவில்லை; எனினும், எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையிலான தீர்மானங்களையே அரசாங்கம் எடுத்துள்ளது. கடமைக்கு சமூகமளிக்கத் தவறிய தொழிற்சங்க தலைவர்கள் 20க்கும் மேற்பட்டோர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தில் அன்மையில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, போராட்டங்களை முன்னெடுப்பதற்கு சகலருக்கும் உரிமையுண்டு; எனினும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் யாராவது செயற்படுவார்களாயின் அவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை எடுக்கவும் தயங்கமாட்டேன் என எச்சரித்திருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் மக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில், இலாபத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் செயற்றிட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் நாட்டு வளங்கள் தொடர்பிலான சந்தேகம் வலுப்பெற்றுள்ளதென எச்சரித்துள்ளன.

காலவோட்டத்துக்கு ஏற்றவகைளில் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வது அவசியம். எனினும், அவை ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை நசுக்கி, ஒடுக்குவதாய் அமைந்துவிடக்கூடாது என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மிகவும் கஷ்டப்பட்டு உழைப்பதைவிட, அடிமைபோல கைஏந்தி வாழ்வதே சுலபமான வழி என எண்ணி வாழ்பவர்களும் நம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களால் உழைப்பின் இனிமையையும் மகிமையையும் உணரமுடியாது.

யாசகம் செய்தே அதிக பணம் சம்பாதிப்பவர்கள் பற்றி அறிவீர்கள். ஆனால், இவர்கள் இத்தகைய வழியில் சேர்த்த பணத்தை செலவு செய்வதில்லை. விரும்பிய உணவைச் சாப்பிடுவதும் இல்லை; அழுக்கான உடையுடன் சுற்றித் திரிவார்கள். அனுபவிக்காத வாழ்க்கை அர்த்தமற்றது.

செல்வந்தர்களில் அநேகர் உணவு உண்ணவே நேரமின்றி அலைகின்றார்கள். குடிசையில் இருந்து கஞ்சியோ, கூழோ குடிக்கும் வறியவர்கள், ரசனையுடன் ருசித்துக் குடிக்கிறார்கள்; நிம்மதியாகத் தூங்குகின்றார்கள்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினை உண்டு. எதிலும் முழுமையாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு அர்த்தமற்ற ஆசைகளை உடைத்துவிட வேண்டும். ஒருவரால் தன்னால் இயன்ற சுமைகளை மட்டுமே தூக்க முடியும். வீணான ஆசைகளைத் தூக்கிச் சுமப்பது, கடினம். இது கடினம் என்பதைத் தெரிந்துகொண்டும், களைப்புடன் இதைச் செய்ய முயலுகின்றனர்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# 'வெடுக்குநாறி' அழிப்பும் புல்லுருவிக் கூட்டமும்



புருஜோத்தமன் தங்கமயில்

வவுனியா, ஒலுமடு வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் தொன்ம வழிபாட்டிடங்களில், வெடுக்குநாறி மலை ஆதிசிவன் முக்கியமானவர். பெரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு, காட்டின் இயற்கைச் சூழலுக்கு சேதம் விளைவிக்காது, அப்பகுதி மக்களால் காலங்காலமாக வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

கடந்த சில வருடங்களாக, ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. இந்த நிலையிலேயே, ஆலய விக்கிரகங்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில், அரச ஆதரவுடன் பௌத்த அடிப்படைவாதத்தின் அடாவடிகளை செயற்படுத்தும் நிறுவனமான தொல்லியல் திணைக்களம், தொடர்ந்தும் தனது அடாவடிகளை முன்னெடுத்து வருகின்றது. தொல்லியல் திணைக்களத்தை நாட்டின் அதியுச்ச அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாலோ, நீதிக் கட்டமைப்பான நீதிமன்றங்களாலோ கூட கட்டுப்படுத்த முடிவதில்லை.

தொல்லியல் திணைக்களம் நினைத்தால், தமிழர் தாயகப் பகுதிகளில் எதை வேண்டுமானாலும் ஆக்கிரமித்துக் கொண்டு, தொல்லியல் நிலப்பகுதி என்று அறிவித்துக் கொண்டு, பௌத்த விகாரைகளை அமைக்க முடியும் என்பதுதான் இப்போதைய நிலை.

முல்லைத்தீவு, குருந்தூர் மலையிலும் நீதிமன்ற உத்தரவுகளை மீறி, பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கு, தொல்லியல் திணைக்களத்தின் உத்தரவுகளுக்கு அமைய, அரச கட்டமைப்புகள் உதவிகளைப் புரிந்து வருவதாக மக்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தது முதல், தமிழர் தாயகப் பகுதிகளில் பௌத்த அடையாளங்களை வலிந்து ஏற்படுத்தும் வேலைகளை, தொல்லியல் திணைக்களமும் பௌத்த அடிப்படைவாத சக்திகளும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன. பொருளாதார மற்றும் சமூக ரீதியாக நாடு எவ்வளவு படுபாதாளத்துக்குள் வீழ்ந்து கிடந்தாலும் பரவாயில்லை. ஆனால், பௌத்த அடிப்படைவாதத்தின் செயற்பாடுகளை நிறுத்தக் கூடாது என்பது, தென் இலங்கையின் ஆக்கிரமிப்பு சக்திகளின் எண்ணம்.

இலங்கையை எண்ணிக்கை அடிப்படையில், சிறுபான்மையினர் அல்லாத பௌத்த சிங்கள நாடாக நிறுவிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, எவ்வளவு விலையை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராகிறார்கள். அது வரலாற்று ரீதியாக கடத்தப்பட்டு வரும் பௌத்த அடிப்படைவாத மனநிலையில் இருந்து வரும் ஒன்றாக கருத முடியும்.

நாடு முழுவதும் புத்தர் சிலைகளை வைத்து நிரப்புவதன் மூலம், இந்த நாட்டின் வரலாற்றை போலியாக எழுதி, பௌத்த சிங்கள நாடாக எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்கும் மகாவம்ச மனநிலையின் விளைவுகள்தான் நாட்டை பாரிய பின்னடைவுக்குள் தள்ளியது. ஆனால், அதிலிருந்து கிஞ்சித்தும் பாடம் படிக்க வேண்டும் என்ற எண்ணம், பௌத்த அடிப்படைவாத சக்திகளுக்குக் கிடையாது.

உலக வரலாற்றில், 'வென்றவர்களால் எழுதப்படுவதுதான் வரலாறு' என்ற நிலை உண்டு. ஆனால், ஒருபோதும் அது உண்மைகளைக் கொண்டிருப்பதில்லை. அதில் புனைவுக்கதைகளும் போலிகளும் சேர்க்கப்பட்டு, வென்றவர்களின் மனங்களைக் குளிர வைப்பதற்கான உள்ளீடுகள் வைக்கப்படும்.

காலங்கடந்து நோக்கப்படும் போது, அந்த வரலாறு சிரிப்பை வரவழைக்கும் ஒன்றாக மாத்திரமே மிஞ்சும். போலிப் புனைவுகளாக எழுதப்பட்ட 'வெற்று வெற்றி' வரலாறுகளை, காலில் போட்டு காலம் மிதித்திருக்கின்றது.

அதுபோல, வென்றவர்கள் என்ற நிலை காலத்துக்கு காலம் மாறி வந்திருக்கின்றது. காலமும் சூழலும் வென்றவர்களை மாற்றி வந்திருக்கின்றது. அந்த உண்மையை உணராமல், காணும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகளை வைப்பதாலும், சைவ சமயச் சின்னங்களை அழித்தொழிப்பதன் மூலமும் பௌத்த நாடு என்று நிறுவ முடியும் என்பதும் நகைப்புக்கிடமான செயலாகும்.

அதிக தருணங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் அடிப்படையில் தாழ்வுச் சிக்கலோடு இருப்பவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இப்போது, தொல்லியல் திணைக்களமும், அதன் ஏவல் சக்திகளாக இயங்கும் பீடங்களும் வெளிப்படுத்துவது அதையேதான்.

கச்சதீவில் புத்தர் சிலை அமைக்கப்பட்டமை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த சின்னமாக அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தமை, நிலாவரைக் கிணற்றடியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை, வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் அகற்றப்பட்டமை.... இப்படி கடந்த சில நாள்களுக்குள் மாத்திரம், தொல்லியல் திணைக்களமும் அதன் இணக்க சக்திகளும் வடக்கு, கிழக்கில் புரிந்த ஆக்கிரமிப்பு ஆட்டங்கள் அளப்பரியன.

தமிழ் மக்களின் எதிர்ப்பை அடுத்து, வெடியரசன் கோட்டை ஆக்கிரமிப்பு அறிவித்தல் அகற்றப்பட்டிருக்கின்றது. அதுபோல, நிலாவரைக் கிணற்றடியில் வைக்கப்பட்ட புத்தர் சிலையும் அகற்றப்பட்டிருக்கின்றது. ஆனால், கச்சதீவில் எந்தவித கட்டுமானங்களையும் முன்னெடுக்கக் கூடாது என்பதையும் மீறி வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையும் அதனை ஒட்டிய கட்டுமானமும் அகற்றப்படவில்லை. இப்போது வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் அகற்றப்பட்ட விடயம் பேசு பொருளானதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆதிலிங்கேஸ்வரரின் விக்கிரகங்களை மீள பிரதிஸ்டை செய்யுமாறு பணித்திருக்கின்றார்.

ஆனால், இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை வெவ்வேறு காரண காரியங்களைச் சொல்லிக் கொண்டு தொல்லியல் திணைக்களம் முன்னெடுக்கவே செய்யும்.

நல்லாட்சிக் காலத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தோடு மிக இணக்கமாக இருந்தது. நினைத்த மாத்திரத்தில் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து பிரச்சினைகளை பேசும் நிலை இருந்தது. அப்போது, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், இந்தப் பத்தியாளரிடம் கீழ்க்கண்டவாறு கூறினார். "....தொல்லியல் திணைக்களத்தை ஆட்சித் தலைவர்களால் கட்டுப்படுத்த முடியாது. அங்கு இருப்பவர்கள் எல்லாரும், பௌத்த அடிப்படைவாதத்தை முன்னெடுப்பதற்காக தெளிவாக பயிற்றுவிக்கப்பட்டவர்கள். அவர்கள், ஆட்சித் தலைவர்களின் உத்தரவுகளை ஒரு பொருட்டாகக் கூட மதிப்பதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், பௌத்த உச்சபீடங்கள் உத்தரவுக்கு செயற்படுவதுதான் ஒற்றைச் சிந்தனை. ஆட்சியில் இருப்பவர்கள் ஐந்து, ஆறு ஆண்டுகளில் மாறக் கூடியவர்கள். அவர்களை கருத்தில் எடுக்க வேண்டியதில்லை என்பது எண்ணம். தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு தொடர்பில், அரசாங்கத்தோடு கூட்டமைப்பு பேசும் போதெல்லாம், அங்கு வரும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடிப்படைவாதம் ஊறிப்போயிருக்கிற அமைப்புக்கு எதிராக, தமிழ் மக்கள் விழிப்போடு இருப்பதுதான் ஒரே வழி. அதனை மீறி, யாரை நம்பியும் சும்மா இருந்துவிட முடியாது" என்றார்.

நாட்டுக்குள் இன மத முரண்பாடுகளை தோற்றுவிக்கும் நடவடிக்கைகளில் பௌத்த அடிப்படைவாத சக்திகள் காலம் காலமாக ஈடுபட்டு வந்திருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இப்போது வடக்கு, கிழக்கில் இந்தியாவின் இந்துத்துவா சக்திகள், புதிய நிகழ்ச்சி நிரலோடு நுழைந்து தமிழ் மக்களிடம் காணும் ஒற்றுமையை சூறையாடி வருகின்றன. அதற்கு இங்குள்ள சிலரும் துணைபோவதுதான் பெரும் அவலம்.

இந்துத்துவாவைப் பொறுத்தளவில் பௌத்தத்தை தன்னுடைய அங்கமாகவே கருதுகின்றது. அது, ஒருபோதும் தென் இலங்கையின் பௌத்த அடிப்படைவாதத்துக்கு எதிராக இயங்காது. மாறாக, தமிழ் மக்களிடையே மதப் பிளவுகளை ஏற்படுத்தி அதில் குளிர்காய நினைக்கின்றது.

அவ்வாறான நிலை உருவானால்தான், தமிழ்த் தேசிய அரசியலை சின்னாபின்னமாக்க முடியும் என்கிற எதிர்பார்ப்பு உள்ளது. தமிழ்த் தேசிய அரசியல் என்பது மத, சாதிய அரசியலைத் தாண்டி நிலைபெற்ற ஒன்று. மத அடையாங்களை முன்னிறுத்தி, தமிழ்த் தேசியம் நிலைபெறவில்லை.

சைவ மக்களும் கிறிஸ்தவ மக்களும் ஒற்றாக நின்றே தமிழ்த் தேசியம் என்ற அரசியலை கட்டியெழுப்பினார்கள். அங்கு மதங்களைக் கடந்து தமிழர்கள், தமிழர் பாரம்பரிய நிலப்பகுதி என்ற விடயம் முதன்மை பெற்றது. ஆனால், இந்துத்துவாவோ அதனை குறிவைத்து தாக்குகின்றது. அதன்மூலம், தமிழ்த் தேசியத்தை அழித்து, தன்னுடைய அரசியல் இலக்கை பிராந்தியத்தில் தக்க வைப்பதற்கான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

இந்துத்துவா எப்போதுமே பௌத்த அடிப்படைவாதம் மாதிரியான கட்டமைப்பைக் கொண்டது. ஆதிக்க ஆக்கிரமிப்புத்தான் அதன் ஒழுங்கு. அப்படிப்பட்ட நிலையில், அதனை நோக்கி தயவு தாட்சண்யங்கள் இன்றி கேள்வி எழுப்பும் எதையும் அழித்தொழிக்கவே செய்யும்.

இதுதான், இந்துத்துவாக்கு தமிழ்த் தேசியம் மாபெரும் பிரச்சினை. அதனால்தான், தமிழ்த் தேசியத்தை அடியோடு அழிக்க இந்துத்துவா சக்திகளும் முனைகின்றன. அதனை உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டிய பொறுப்பு, தமிழ் மக்களுக்கு உண்டு.

ஏற்கெனவே, தமிழர் தரப்பில் பலரை இந்துத்துவா சக்திகள் விலைக்கு வாங்கிவிட்டன. அவை, பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிரான எந்தக் குரலையும் எழுப்புவதில்லை. மாறாக, சிறுபான்மை மதங்களுக்கு எதிராகவே பொங்கி பூரிக்கின்றன.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் அழிப்பு தொடங்கி எந்தவொரு தமிழ் தொன்ம வழிபாட்டிடங்கள் அழிப்பு தொடர்பில் இந்தச் சக்திகள் கேள்வி எழுப்பாது உறங்கிவிடும். இவைக்கு அவர்களின் எஜமானர்கள் என்னத்தை சொல்கிறார்களோ அதைச் செய்வதுதான் வேலை.

அப்படியான நிலையில், தமிழ் மக்கள் தங்களின் பாரம்பரிய அடையாங்களையும் உரிமைகளையும் பேண வேண்டுமாயின் தென் இலங்கை பௌத்த அடிப்படைவாத சக்திகளுக்கு எதிராக மாத்திரமல்ல, உள்ளிருக்கும் புல்லுருவிக் கூட்டத்துக்கு எதிராகவும் கவனமாக இருக்க வேண்டும். அதுதான், எதிர்காலத்துக்கான எங்களின் இருப்பை தக்க வைக்க உதவும்.

## கடிதங்கள்

சந்திவெளி – திகிலிவெட்டை

### பாதுகாப்பற்ற படகுப் பாதை

சந்திவெளி - திகிலிவெட்டை பகுதியில் சேவையில் ஈடுபட்டு வருகின்ற படகுப் பாதையில் பயணம் செய்வது மிகுந்த ஆபத்து நிறைந்ததாக காணப்படுவதால், பாதுகாப்பான போக்குவரத்துக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, படகுப் பாதையில் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சந்திவெளி - திகிலிவெட்டை பகுதியில், கோறளைப்பற்று பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற படகுப் பாதை போக்குவரத்தானது, உயிராபத்து நிறைந்ததாக உள்ளதாக மக்கள் கவலை வெளியிடுகின்றார்கள்.

குறித்த படகுப் பாதையின் பாகங்கள் துருப்பிடித்தும் உடைந்தும் காணப்படுவதாகவும் அடிப்பகுதியில் உள்ள துவாரங்களின் ஊடாக நீர் உட்புகுவதாகவும், பயணத்தின்போது நீரை இறைத்துக் கொண்டு பயணிக்க வேண்டி இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறான பாதுகாப்பற்ற படகுப் பாதை பயணத்தின்போது, இப்பகுதி மக்கள் தமது உயிரைக் கையில் பிடித்தபடியே நாளாந்தம் சுமார் 160 மீற்றர் தூரத்தைக் கடக்கிறார்கள். எனவே, படகுப் பாதையை, விரைவில் புனரமைத்து, சேவையில் ஈடுபடுத்தவும், அதுவரை மாற்று திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் கோரி நிற்கின்றார்கள்.

சஞ்சீவன் துரைநாயகம்



# அலறிய சிறுமி; 55 வயதான வைத்தியர் கைது



வயிற்று வலியால் அவதிப்பட்ட நான்கு வயதான சிறுமியைப் பாலியல் ரீதியில் துன்புறுத்திய குற்றச்சாட்டின் கீழ், 55 வயதான வைத்தியரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம், புதுடெல்லியின் வடமேற்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது. ஆதர்ஸ் நகரைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தனது 4 வயது மகள் வயிற்று வலியால் அவதிப்படுவதை அறிந்து, அவளை அருகில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில் மகளுடன் வைத்தியரின் அறைக்குச் சென்ற பெண் தனது பணப்பையை வெளியே மறந்து வைத்துவிட்டு வந்துள்ளதாகக் கூறி அதனை எடுப்பதற்காக வெளியே சென்றுள்ளார்.

பின்னர் அவர் மீண்டும் வைத்தியரின் அறைக்குத் திரும்பியபோது அங்கு குறித்த வைத்தியர் தனது மகளை பாலியல் ரீதியில் துன்புறுத்தி கொண்டிருப்பதை கண்டு அதிர்ந்துபோனார்.

உடனடியாக குழந்தையுடன் அங்கிருந்து வெளியேறியஅவர், இது குறித்து புகார் அளித்தார். அதன் பேரில் அந்த வைத்தியரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை

## பற்களைப் பிடுங்கிய விவகாரம்; முதலமைச்சர் ஸ்டாலின் விளக்கம்



திருநெல்வேலியில் விசாரணைக் கைதிகளின் பற்கள் பிடுங்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஏஎஸ்பி பல்வீர் சிங்கை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் நேற்றைய தினம் (29) தெரிவித்தார்.

அம்பாசமுத்திரத்தில் உதவி காவல் துறை கண்காணிப்பாளராக பல்வீர் சிங் என்பவர் பணியாற்றி வந்துள்ளார். அவர் பொறுப்பேற்றபின், சிறிய குற்றங்களுக்காக விசாரணைக்கு அழைத்து செல்லப்படுவோரின் பற்களை பிடுங்கி தண்டனை அளித்து வந்ததாகச் சர்ச்சை எழுந்துள்ளது.


இதுவரை 10-க்கும் மேற்பட்டோருக்கு இவ்வாறு தண்டனை அளித்துள்ளதாகவும், அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து, பற்களை பிடுங்கி தண்டனை அளிக்கும் ஏஎஸ்பி, கல்லிடைக்குறிச்சி காவல் ஆய்வாளர் ராஜகுமாரி, சிறப்பு உதவி ஆய்வாளர் ராமலிங்கம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார். இதற்குப் பதில் அளித்த முதலமைச்சர் அம்பை ஏ.எஸ்.வி விவகாரத்தில் புகார் வந்த உடனேயே விசாரணைக் குழு அமைத்து விசாரணை நடைபெற்று வருகிறது.

தற்போது அவரை பணியிடை நீக்கம் செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன். முழுமையான விசாரணை அறிக்கை வந்த உடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இவை எல்லாம் சம்பவம் நடத்த உடனே இந்த அரசு எடுத்த நடவடிக்கை" என்று கூறினார்.

நியூயோர்க்

## ஆபாசம் காட்டும் நீதிபதி



நீதிபதியாகப் பணியாற்றி வரும் நபர் ஒருவர் ஆபாச நடிகராகமாறிய அதிர்ச்சிகரமான சம்பவம் நியூயோர்க்கில் இடம்பெற்றுள்ளது.

கிரிகோரி ஏ. லாக் என்ற 33 வயதாக நபரே இவ்வாறு பகலில் நீதிபதியாகவும் , இரவில் ஆபாச நடிகராகவும் பணிபுரிந்து வருகின்றார்.


ஒன்லி பேன்ஸ் என்ற பெயரில் இணையத் தளமொன்றை நடத்திவரும் இவர் அதில் சுமார் 100 க்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்களை பதிவிட்டுள்ளார் எனவும், இதற்காக மாதம் 12 அமெரிக்க டொலர்களை கட்டணமாக ரசிகர்களிடத்தில் இருந்து அவர் அறவிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மையில் கிரிகோரி, தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் " 'நான் ஒரு நீதிபதி' ,காலையில் ஒரு வெள்ளை கொலர் நிபுணர். இரவில் தொழில்சார்ந்தவர்" எனப் பதிவிட்டுள்ளார். மேலும் கிரிகோரி தன் சுயசரிதையில் 'முதிர்ச்சியற்றவர், முரட்டுத்தனமான, ஆபாசமானவன் ' என்று தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில் இவ்விவகாரம் நியூயோர்க் அதிகாரிகளால் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதுகுறித்து நகர கவுன்சில் பெண் விக்கி பலடினோ கூறியதாவது:- இந்த நகரம் அனைத்து மட்டங்களிலும் அதன் நீதிமன்றங்களில் முழுமையான நம்பிக்கையை கொண்டிருக்க வேண்டும். மேலும் லாக் போன்ற நபர்களை சட்ட அதிகார பதவிகளுக்கு நியமிப்பது நீதித்துறையில் பொதுமக்களின் நம்பிக்கையை அழிக்கின்றது என்றும் கூறினார்.

கேரளா

## பெண் வேடமிட்டு ஆண்கள் நேர்த்தி



கேரள மாநிலம், கொல்லம் மாவட்டத்திலுள்ள கோட்டங்குளங்கரா பகுதியில் ஆண்டு தோறும் 'சமயவிளக்குத் திருவிழா' என்ற விநோதத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.

இத்திருவிழாவின் போது ஆண்கள் தங்கள் நேர்த்திக்கடன் நிறைவேற்றும் விதமாக பெண் வேடமிட்டு பிரார்த்தனை செய்துவருகின்றனர்.

இதுவே இத்திருவிழாவின் சிறப்பம்சமாகக் கூறப்படுகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டு நடந்த திருவிழாவின்போது சிறந்த பெண் ஒப்பனைக்காக முதல் பரிசு வென்ற ஆண் ஒருவரின் புகைப்படத்தை இந்திய ரயில்வே துறை அதிகாரி தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

குறித்த புகைப்படமானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

புதுக் கோட்டை

## விநோத விடுப்புக் கடிதம் வலைத்தளங்களில் வைரலாகிறது



மின்சார சபை ஊழியரொருவரின் விநோத விடுப்புக் கடிதமொன்று சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. பொதுவாக அரசு துறை அல்லது தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் விடுப்புத் தேவை என்றால் குறிப்பிட்ட காரணங்களை கூறி விடுப்பு பெற்றுக் கொள்வது வழக்கம்.

அதுபோல் விடுப்புக்கான காரணத்தை பொறுத்தே விடுமுறைக்கு அனுமதி அளிப்பது உண்டு. இந்நிலையில் புதுக்கோட்டை மின்சார சபையில் பணியாற்றும் உதவி மின் பொறியியலாளர் ஒருவர் 'ஒரு நாள் விடுப்பு கோரி உயர் அதிகாரிக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்தில், "கடந்த சில வாரங்களாக பணியாளர்கள், மின்சார சபையினாலும், தொழிற்சங்க அமைப்புகளாலும் நடத்தப்படும் விதம் குறித்து பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதால், அதிலிருந்து மீண்டு வந்து பணிகளை செவ்வனே தொடரும் வகையில் மன அமைதியை வேண்டி எனது வீட்டிலேயே அண்ணல் காந்தியடிகளின் உருவப்படத்திற்கு முன்பாக அமர்ந்து தியானம் செய்யவுள்ளேன். எனவே எனக்கு ஒரு நாள் விடுப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இக்கடிதத்தை கண்டு அதிர்ச்சியடைந்த அதிகாரிகள், இதுபோன்ற காரணங்களுக்கு விடுப்பு தர முடியாது எனக் கூறி அதனை நிராகரித்தனர். தியானம் செய்ய விடுப்பு கேட்ட மின்சார சபை அதிகாரியின் இந்த விநோத விடுப்பு கடிதம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

தென்னாபிரிக்காவுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகள்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகளும், இரண்டாவது போட்டியை தென்னாபிரிக்காவும் வென்றிருந்த நிலையில், ஜொஹன்னஸ்பேர்க்கில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

மே. தீவுகள்: 220/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றொமாறியோ ஷெப்பர்ட் ஆ.இ 44 (22), நிக்கலஸ் பூரான் 41 (19), பிரண்டன் கிங் 36 (25), றேமன் றீஃபயர் 27 (18), கைல் மேயர்ஸ் 17 (10), அல்ஸாரி ஜோசப் ஆ.இ 14 (09), ஜேஸன் ஹோல்டர் 13 (09), றொவ்மன் பவல் 11 (04) ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்றிச் நொர்கியா 2/36 [4])

தென்னாபிரிக்கா: 213/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றீஸா ஹென்ட்றிக்ஸ் 83 (44), றீலி றொஸோ 42 (21), ஏய்டன் மார்க்ரம் ஆ.இ 35 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 5/40 [4])

போட்டியின் நாயகன்: அல்ஸாரி ஜோசப்

தொடரின் நாயகன்: ஜோன்ஸன் சார்ள்ஸ்



சிநேகபூர்வப் போட்டியில்

## ஜேர்மனியை வென்ற பெல்ஜியம்

ஜேர்மனியில் நேற்று அதிகாலை நடைபெற்ற சிநேகபூர்வப் போட்டியொன்றில் 3-2 என்ற கோல் கணக்கில் அவ்வணியை பெல்ஜியம் வென்றது.

பெல்ஜியம் சார்பாக, யனிக் கராஸ்கோ, றொமெலு லுக்காக்கு, கெவின் டி ப்ரூனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஜேர்மனி சார்பாக, நிக்லஸ் புல்குருக், சேர்ஜி நர்பி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

யூரோ தகுதிகாண் போட்டிகள்:

## ஸ்கொட்லாந்திடம் தோற்ற ஸ்பெய்ன்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளில், ஸ்கொட்லாந்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் ஸ்பெய்ன் தோற்றது.

ஸ்கொட்லாந்து சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஸ்கொட் மக்டொமினி பெற்றிருந்தார்.

நியூசிலாந்து எதிர் இலங்கை:

## நாளை மூன்றாவது போட்டி

நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது, ஹமில்டனில் நாளை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை நியூசிலாந்து வென்றதுடன், மழையால் இரண்டாவது போட்டி கைவிடப்பட்ட நிலையில், தொடரைச் சமப்படுத்துவதற்கு இப்போட்டியை இலங்கை கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையிலுள்ளது.

இப்போட்டியில் வென்றால் கூட உலகக் கிண்ணத்துக்கான நேரடியாகத் தகுதி பெறுவதென்பது தென்னாபிரிக்காவை நெதர்லாந்து வெல்வதிலேயே தங்கியுள்ளது.

மீண்டுமொரு முறை இலங்கையின் துடுப்பாட்டமே கவனம் பெறுவதுடன், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் வனிடு ஹஸரங்கவின் பெறுபேறுகளும் கவனம் பெறுகையில் அவர் உறுதியான பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டியுள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 30 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.